பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 24 திங்கட்கிழமை 09.09.2019 கதிர் 308

இனிது ரகசியம் அல்ல!

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காவும், குறுக்கு வழியில் நிதி சம்பாதிப்பதற்காகவும் சில திட்டங்களை – விடயங்களை – முன்னெடுத்து நாட்டைப் பெரும் கடனாளியாக்கி நடுவீதிக்கு கொண்டு வந்துள்ளனர் அரசியல்வாதிகள்.

பக்கம் 02

# இணைப்புடன் சமஷ்டித் தீர்வுக்கு ஜே.வி.பி. சார்பு அணி முயலுமாம்!


## நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,செப்.09

இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்குக்கு சுயநிர்ணைய உரிமையுடன் கூடிய தீர்வு ஒன்றை முன்வைத்து, அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கத் தாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜே.வி.பி. சார்புப் போக்குடைய 'தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின்' பிரதிநிதிகள், இதற்காக ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பக்கம் 03




## அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நாளை ரணில் – சஜித் முக்கிய சந்திப்பு

### அதற்கு முன் சஜித் இன்று யாழ்., கிளிநொச்சி விஜயம்



கொழும்பு, செப். 10

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிக்கும் தீர்க்கமான சந்திப்பு நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. நேற்று இந்தச் சந்திப்பை நடத்த பிரதமர்

பக்கம் 02

## கோட்டாபயவின் மேடையில் முத்தையா முரளீதரன் உரை; புலிகள் தோற்கடிக்கபட்ட நாளே தமக்கு முக்கிய நாளாம்!

கொழும்பு,செப்.09

கொழும்பு ஷங்க்ரி–லா ஹோட்டலில் நேற்று நடந்த 'வியத்கம' இளைஞர் மாநாட்டின் அமர்வில் இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளீதரன் கலந்து கொண்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆதரவான இந்த அமைப்பின் வருடாந்த

பக்கம் 03



## நவாலியில் நேற்று வீடு புகுந்து வன்முறைக் கும்பல் அடாவடி!

யாழ்ப்பாணம், செப். 10

நவாலி அட்டகிரி பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல், வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

பக்கம் 02

## கோட்டபாயவை வரவேற்கும் வளைவு உடைந்து விழுந்தது



கொழும்பில் சிலர் காயம்: வாகனங்கள் சேதம்

கொழும்பு,செப்.09


கொழும்பு, மஹரகம பிரதான வீதியில் கட்டப்பட்டிருந்த மஹிந்த மற்றும் கோட்டாபயவை வரவேற்கும்

பக்கம் 03

## யாழ் பல்கலை மாணவப் பிரதிநிதிகள் ஆளுநருடன் விரிவான உரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.09

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்குமிடையிலான சந்திப்பு



பக்கம் 03

## கோட்டாபயவை வாக்காளராக பதிந்தமைக்கு சமலிடம் விளக்கம்

கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட வெளிநாட்டு குடிமக்களை, வாக்காளர் பட்டியலில் இணைத்தமை குறித்து விளக்கமளிக்குமாறு சமல் ராஜபக்ஷவிற்குக் கடிதம் மூலம் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

செப்ரெம்பர் 2ஆம் திகதி இதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டிருந்த போதே, கடந்த 2005இல் கோட்டாபய ராஜபக்ஷ

பக்கம் 02

## நிதி அமைச்சர் தலைமையில் யாழ். செயலகத்தில் கூட்டம்



யாழ்ப்பாணம்,செப்.09

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் விசேட கலந்துரையாடல்

பக்கம் 03

## இரு பெரஹெர யானைகளுக்கு மதம் பிடித்தமையால் களேபரம்!

### கோட்டை ரஜமகா விகாரையில் 17 பேர் காயம்



கொழும்பு,செப்.09

கொழும்பு கோட்டை–ரஜமகா விகாரையில் நேற்று இரவு நடந்த பெரஹெரவின் போது, 2 யானைகளுக்கு மதம் பிடித்து, மக்கள் கூட்டத்

பக்கம் 02

## அபிவிருத்தி செய்வது சலுகை அரசியல் அல்ல; உரிமைக்காகவே கூட்டமைப்பு போராடுகிறது!

### மானிப்பாய் நிகழ்வில் சரா எம்.பி. விளக்கம்

- எஸ்.நிதர்ஷன்-

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. அந்த உரிமையை முன்னிலைப்படுத்திய நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்திருக்கும் அக்கட்சியின்



பக்கம் 03

## இரு பெரஹெர

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குள் புகுந்து தாக்கியதில், 17 பேர் காயமடைந்தனர்.

பெரஹெரவைக் காண நூற்றுக்கணக்கான மக்கள் வீதியின் இருமருங்கிலும் காணப்பட்டனர்.

பெரஹெரா பேரணி விகாரையை நெருங்கியவேளை, யானை யொன்றுக்கு மதம் பிடித்தது. இதனையடுத்து, யானை வீதியில் ஓடிச்சென்று, பேரணியில் இருந்த இன்னொரு யானையுடன் சண்டையிட்டது.

இதனால், அந்த யானைக்கும் மதம் பிடித்தமையால், பெரஹெர நிகழ்வைக் காண வந்திருந்த 12 பெண்கள் உட்பட17 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமைச்சரவை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்தபோதும் அதனை சஜித் பிரேமதாஸ தவிர்த்திருந்தார்.

கடந்த 6ஆம் திகதி அலரி மாளிகையில் கட்சிப் பிரமுகர்களுடன் கலந்துரையாடியரணில், மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கப் போகிறேன் எனத் தெரிவித்திருந்தார். அத்துடன் சஜித்து டன் பேச ஏற்பாடு செய்து தருமாறு மலிக் சமரவிக்கிரமவிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்படி, ரணிலின் கோரிக்கை சஜித்திடம் தெரிவிக்கப்பட்டபோது, வேறு முக்கிய அலுவல்கள் எனக்கு உள்ளன எனத் தெரிவித்து அந்தச் சந்திப்பை சஜித் தவிர்த்திருந்தார்.

இந்த நிலையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை யில் இருவரும் சந்தித்துப் பேச முடிவு செய்துள்ளனர். நாளை காலையில் அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர் இருவரும் பேச்சு நடத்தத்திட்டமிட்டுள்ளனர். இதேவேளை, அமைச்சர் சஜித் பிரேமதாஸ இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கிறார். அதைத் தொடர்ந்து, கிளி நொச்சி மாவட்டத்திற்கும் செல்கிறார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியப்பாடற்ற சில நடவடிக்கைகளை எடுத்துக் கையைச் சுட்டுக் கொண்டமையோடு நாட்டையும் அவர்கள் குட்டிச்சுவராக்கினர்.

மத்தள விமான நிலையமும், அம்பாந்தோட்டைத் துறைமுகமும் இவற்றுக்கு நல்ல உதாரணங்கள்.

பல்லாயிரம் கோடிகளை ஏப்பம் விட்ட இந்த இரண்டு திட்டங்களும் இலங்கைக்கு வெள்ளை யானைகள். கட்டித் தீனிபோட முடியாத விடயங்கள்.

அவற்றுக்காக எடுத்த கடனுக்குரிய நிலுவைகளைக் கட்ட முடியாத நிலையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்குத் தாரை வார்த்தாயிற்று.

இப்போது மத்தளவையும் இந்தியாவுக்கோ அல்லது அதுபோன்ற வேறு ஏமாந்த சோணகிரி ஒன்றுக்கோ தேடித் தலையில் கட்டியடிக்க வேண்டிய கட்டாயம்.

அல்லது மத்தள விமான நிலையக் கட்டடத்தை அரிசி, மா சேமிக்கும் சேமிப்புக் களஞ்சியமாக மாற்ற வேண்டியதுதான். வேறுவழியில்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும், மத்தள விமான நிலையத்தையும் சாத்தியப்பாடற்ற திட்டங்களாக முன்னெடுத்தமையினால்தான் இந்த அவல நிலைமை.

அதே சாத்தியப்பாடற்ற அணுகுமுறையைக் கையாண்டு, பலாலி சர்வதேச விமான நிலையத் திட்டத்தையும் மண்ணாக்கும் எத்தனம்தான் இங்கு நடக்கின்றது போலும்.

இந்த விமான நிலையத்தை ஆரம்பித்து, கொச்சின், மும்பை, புது டில்லிக்கு விமான சேவைகளை நடத்தப் போகின்றார்களாம். வேடிக்கையான விடயம். வடக்கிலிருந்து இந்த விமான நிலையங்க ளுக்கு யார் போகப் போகின்றார்கள்? பொருளாதார ரீதியில் இது சாத்தியமானதா என்பது எந்த முட்டாளுக்கும் தெரிந்த விடயம்தான்.

இந்த மூன்று தடத்திலும் பலாலியில் இருந்து சேவையை நடத்திக்கையைச் சுட்டுக் கொள்ள எந்த விமான சேவை நிறுவனம் தயார் என்பது தெரியவில்லை.

யாழ்ப்பாணம் – கொழும்பு ரயில் சேவை கொட்டிக் கொடுப்பதால்தான் தினசரி சேவையை ஏழாக உயர்த்தியிருக்கின்றார்கள்.

அதுபோல யாழ். – சென்னை, யாழ். – திருச்சி , யாழ். – மதுரை விமானசேவைகளை ஆரம்பித்தால்தான் அவை கொட்டிக் கொடுக்கும்.

அது, கொழும்புக்கும், ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்துக்கும் வர்த்தக வாய்ப்பைக் கொடுக்கும் என்று பார்த்து , அந்தச் சேவைகளுக்குத் தடை போட்டால், பலாலி சர்வதேச விமானத் தளமும் மத்தள மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் போன்று வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடும் விவகாரமாகத்தான் முடியும்.

பலாலியில் இருந்து சென்னை, திருச்சி, மதுரைக்கான சேவைகளை ஆரம்பிக்க விடாமல் முட்டுக்கட்டை போடுவது என்பது தமிழருக்குக் கைக் கெட்டியது வாய்கெட்டாமல் பண்ணும் பேரினவாத திருகுதாள நடவடிக்கையன்றி வேறில்லை.

இதற்குப் பின்னால் புதைந்து கிடக்கும் சிங்களப் பேரினவாதத்தின் கரிசனையைப் பிய்த்து உதறுவதானால் அதுவே பெரிய கட்டுரையாகிவிடும்.

இந்த விடயத்தில் நமது தமிழர்களின் அரசியல் தலைமைகள் என்ன செய்யப் போகின்றன? பார்த்திருக்கின்றோம்.

- மின்னல்-

## கோட்டாபயவை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருந்தார். மெதமுதலன வீட்டு முகவரி யிலேயே அவர் பதிவு செய்யப்பட்டார்.

எனினும், அப்போது அவர் அமெரிக்க குடிமகன் என்ற விடயம் அண்மையில் வெளியானது. அவர் தவிர, கோட்டாபயவின் மனைவி, பஸில் ஆகியோரின் பெயர்களும் முறையற்றவிதமாகவே அப்போது பதிவு செய்யப்பட்டிருந்தன.

இதையடுத்து, இந்த விவகாரத்தில் தேர்தல் திணைக்களம் விளக்கம் கோரியுள்ளது.

அவர்கள் பதிவு செய்த முகவரிக்குரிய வீடு சமல் ராஜபக்ஷவிற்குரியது என்ற அடிப்படையில் அவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

## நவாலியில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட கும்பலே வீட்டில் இருந்தவர்களை வாள்களைக் காண்பித்து மிரட்டிவிட்டு வீட்டிலிருந்த பொருள்கள், தள பாடங்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

சம்பவம் தொடர்பில் மானிப் பாய் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, அண்மைய நாள்களாக யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் பொலிஸார் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் எனப் பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-07)


FREE SPOKEN ENGLISH for 2019 A/L Batches




Keep in touch with ACADEMICS & PROFESSIONALS

DIPLOMA IN LAGUAGE
- DIPLOMA IN ENGLISH - BEGINNER
- DIPLOMA IN ENGLISH- ELEMENTRY
- DIPLOMA IN ENGLISH - INTERMEDIATE
- DIPLOMA IN ENGLISH ADVANCE INTERMEDIATE
- ACADEMIC ENGLISH
- SPOKEN ENGLISH - BEGINNERS
- SPOKEN ENGLISH -PROFESSIONAL
- IELTS -COACHING

DOPLOMA IN PASSION
- DIPLOMA IN JOURNALISM
- DIPLOMA IN PHOTOGRAPHY
- DIPLOMA IN ART AND DESIGN
- DIPLOMA IN HR MANAGEMENT

DIPLOMA IN IT
- DIPLOMA IN HARDWARE & NETWORKING
- DIPLOMA IN SOFTWARE ENGINEERING
- DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
- DIPLOMA IN WEB ENGINEERING

FUTURE FOR INTELLIGENT
AQUINAS COLLEGE

NO.113 VEMBADY ROAD, JAFFNA
AQUINAS COLLEGE
077 100 1981

## இணைப்புடன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முப்பது பொது அமைப்புகளை உள்ளடக்கிய 'தேசிய மக்கள் சக்தி இயக்கம்' இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வேட்பாளரை முழு அளவில் ஆதரிக்கின்றது என்பது தெரிந்ததே. அந்த அமைப்பில் இடம் பெற்றுள்ள 'தேசிய புத்திஜீவிகள் அமைப்பின்' பிரதிநிதிகளே வடக்கே வந்து பல தரப்பினரையும் சந்தித்து வருகின்றனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர்கள் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்கள். இதன் போது கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

கடந்த கால அரசியல் கட்சிகளின் ஆட்சியில் ஏற்பட்ட ஏமாற்றமே இந்தத் தேசிய மக்கள் சக்தி இயக்கம் உருவாக்கக் காரணமாக இருந்தது. தேசிய மக்கள் சக்தியினால் நாட்டில் அனைத்து மக்களுக்குமான தீர்வு வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வரைவு ஜனாதிபதித் தேர்தலுக்காக மட்டும் உருவாக்கப்படவில்லை. அது இறுதியான வரைவும் இல்லை.

நாட்டில் அனைத்து மாகாணங்களில் உள்ள மக்களுடனும் பேசி, அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான மார்க்கங்கள் அந்த வரைவில் இணைத்துக் கொள்ளப்படும். இறுதியாக முழுமையான திட்டமாக அது மாற்றப்படும்.

பல கட்சிகளை ஆராய்ந்தோம். யாருடன் சேர்ந்து சமூக நீதிக்காக வேலை செய்யலாம் என்று பார்த்தோம். இதன் பயனாகத் தேசிய மக்கள் சக்தியில் இணைந்தோம். அதில் 30 அமைப்புகள் உள்ளன. அதில் முக்கியமானது ஜே.வி.பி..

யாழில் பலரையும் சந்தித்தோம். எங்களைப் போல சிந்திக்கின்றார்கள். அரசியலில் மூன்றாவது பாதை தேவை என்பதை யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களும் ஏற்கின்றார்கள். முற்போக்குச் சிந்தனை உள்ள தமிழ் மக்கள் எங்களுடன் கைகோர்க்க வேண்டும்.

நாட்டு மக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள். கடந்த 18 ஆம் திகதி காலிமுகத்திடலில் ஒரு லட்சம் மக்கள் மத்தியில் வைத்து அனுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக அறிமுகம் செய்துள்ளோம்.

இந்நிலையில் காலிமுகத்திடலில் கூடிய கூட்டத்தைப் போன்று அடுத்த மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் மக்கள் அலை ஒன்றைத் திரட்ட உள்ளோம். அதில் எமது ஜனாதிபதி வேட்பாளர் மக்கள் முன் தோன்றிப் பேசுவார். அவருடனும் மக்கள் பேச முடியும்.

தலைவர் பேசுவதை மக்கள் கேட்க வேண்டும் அதே போன்று மக்கள் பேசுவதைத் தலைவர் கேட்க வேண்டும். அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் உள்ளன.

ஆனாலும் தமிழ் மக்களுக்குத் தனிப்பட்ட - பிரத்தியேக -பிரச்சினைகள் உள்ளமையை நூறு வீதம் ஏற்கின்றோம்.

பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீளவும் இணைத்து, சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கத்துடன், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வைப் பெற்றுத்தர நாங்கள் முயற்சிப்போம். இது தொடர்பான அழுத்தங்களை இப்போதே ஜே.வி.பியிடம் கொடுக்க ஆரம்பித்துவிட்டோம். - என்றனர்.

## யாழ் பல்கலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முந்தினம் மாலை ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

யாழ்பாண பல்கலைக்கழகத்தில் வேந்தர் மற்றும் துணை வேந்தர் இல்லாத காரணத்தினால் பட்டமளிப்பு விழா நடத்த முடியாமல் இருப்பதாகவும் இதனால் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்கள் வேலை வாய்ப்பை தேடுவதற்கும் உயர் படிப்புக்களை மேற்கொள்வதற்கும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தி சிறந்ததொரு தீர்வினை பெற்றுத்தருமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் சுகாதார வசதிக்காக நிரந்தர வைத்தியரோ, தாதியினரோ இல்லாமையினால் மாணவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இது தொடர்பிலும் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறும் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். இராமநாதன் நுண்கலைப் பீட பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுவதால் மாணவர்கள் பாதிப்படைகின்றனர். அதற்கான தீர்வையும் வீதி அதிகாரசபை மற்றும் பொலிஸாருடன் இணைந்து ஏற்படுத்தி தருமாறும் கோரினர்.

யாழ் மக்களுக்கு நீர் வழங்கும் முகமாக அண்மையில் ஜனாதிபதியினால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட வடமராட்சி களப்பு செயற்திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதற்கு ஆளுநர் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் வரவேற்ற மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வடக்கின் சமூகப் பிரச்சினைகள் தீர்ப்பதற்கு ஆளுநர் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு தயாராகவுள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர், வேந்தர் மற்றும் துணைவேந்தர் நியமனங்கள் தொடர்பிலும் பட்டமளிப்பு விழா காலதாமதம் தொடர்பிலும் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து கூடிய விரைவில் சரியான தீர்வொன்றைப் பெற்றுத்தருவார் என உறுதி அளித்தார். அத்தோடு இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கு முன்னால் உள்ள வீதியில் வேகத் தடைகளையும் பதாதைகளை காட்சிப்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையுடனும் வடமாகாண வீதிப் பாதுகாப்பு சபையுடனும் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வார் எனவும் குறிப்பிட்டார்.

வைத்தியர் பிரச்சினை முழு வடமாகாணத்துக்கும் காணப்படுவதால் இதுதொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுக்க முடியுமென குறிப்பிட்ட ஆளுநர் அதுவரையில் மாணவர்களுக்கு முதலுதவி பயிற்சி வழங்கி அவர்களை இதில் ஈடுபடுத்த முடியுமென்றும் தெரிவித்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் புத்தக விற்பனை கூடமொன்றையும் உருவாக்கி நடத்துமாறும் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கிய ஆளுநர் அதற்கு நிதியுதவி அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

## அபிவிருத்தி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் சலுகை அரசியலுக்கு கூட்டமைப்பு போகவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத்தொகுதி திறப்பு விழா நிகழ்வு மேற்படி பிரதேச சபையின் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதே போன்று இன்னும் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டி இருக்கின் றன. இந்த அபிவிருத்தி தேவை என்றே எமது மக்களும் கோருகின்றனர். அதற்காகத் தங்களது ஆதரவையும் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பது சலுகைகள் அல்ல. அவ்வாறான சலுகை அரசியலை நாங்கள் செய்யவில்லை. அந்த அரசியலுக்கும் நாங்கள் போகவில்லை. எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகவே செயற்படுகின்றோம்.

அந்த உரிமையை பெற்றுக் கொள்வதனையே முன்னிலைப் படுத்தி எமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆகையினால் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களை சலுகையாக யாரும் கருதக் கூடாது. எமக்கான உரிமைகளையே நாம் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றோம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் சலுகைகள் அல்லஎன்பதைநாம் அரசிற்கும் சொல்லியுள்ளோம். அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்ற அதே நேரத்தில் எமது உரிமைகளையும் வழங்க வேண்டுமென்றும் கோரியுள்ளோம்.

இதே வேளை இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறவிருக்கின்றது. அந்தத் தேர்தலின் பின்னரே நாட்டில் என்ன நடக்கின்றது என்பது தெரிய வரும். ஏனெனில் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரப்போகின்றவரைப் பொறுத்துதான் இந்த அரசின் செயற்பாடுகளும் அமையப் போகின்றன.

குறிப்பாக இன்னும் சில மாதங்களில் ஜனாதிபதியின் கைகளுக்கு(நாடாளுமன்றத்தைக் கலைக்கின்ற) அதிகாரங்கள் செல்லப் போகின்றன. வரப்போகின்றவர் எவ்வாறான முடிவுகளை எடுக்கப் போகின்றார் என்பது தெரியாது.

அவர் வந்த வுடன் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம். கலைக்காமலும் இருக்கலாம். இந்த அர சாங்கம் தொடர்ந்து இருந்தால் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்கக் கூடியதாக இருக்குமென்று கருதுகின்றேன்.

மேலும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அத்தேர்தல் தொடர்பில் கூட்டமைப்பு இதுவரையில் எந்தவிதமான முடிவுகளையும் எடுக்கவில்லை. நாம் பொறுமையாக இருந்து உரிய நேரத்தில் நல்லதோர் முடிவை எடுப்போம்.

ஏனெனில் கடந்த காலத்தில் வாக்குறுதி வழங்கியவர்களே அதனைச் செய்யாமல் இருக்கின்ற நிலையில் மீண்டும் என்ன அடிப்படையில் நாங்கள் செயற்படப் போகின்றோம் என்பது மிக முக்கியமாக இருக்கின்றது. ஆகையினால் இந்த விடயத்தில் அவசரப்படாமல் பொறுமையாக இருந்து, கலந்துரையாடி, மிகவும் பயனுள்ளதோர் முடிவை நாங்கள் எடுப்போம். - என்றார்.

இந் நிகழ்வில் வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(இந் நிகழ்வின் படங்கள் 4ஆம் பக்கத்தில்)

## கோட்டாபயவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு நேற்றுக் காலை தொடங்கியது. ஏழு அமர்வுகளாக நடந்த இந்த மாநாட்டின் இறுதியில், தனது கொள்கை விளக்கவுரையை கோட்டாபய நிகழ்த்தினார்.

வணிக நம்பிக்கையை உருவாக்குதல், அறிவு பொருளாதாரத்திற்கான கல்வித் துறையை மாற்றுவது, உலகளாவிய போக்குகள் மற்றும் தேசிய பாதுகாப்புக்கான சவால்கள் மற்றும் ஒழுக்கமான மற்றும் வளர்ந்த ஜனநாயகத்தை இலங்கை விரைவாகப் பின் தொடர்வதில் இளைஞர்களின் பங்கு உள்ளிட்ட தலைப்புக்களில் அமர்வுகள் இடம்பெற்றன.

இதில் முத்தையா முரளிதரனும் கலந்து கொண்டிருந்தார்.

இங்கு உரையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பை வலுப்படுத்துவதன் மூலம் வலுவான நாட்டைத் தாம் உருவாக்கவுள்ளார் எனத் தெரிவித்தார்..

அங்கு உரையாற்றிய முத்தையா முரளீதரன் இலங்கையை அரசியல் அனுபவ மிக்க அரசியல்வாதி ஒருவரே ஆட்சிசெய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக அனுபவமிக்க அரசியல்வாதி ஒருவரே தெரிவு செய்யப்படவேண்டும்.

கிரிக்கெட் வீரர்களும் ஏனைய துறைசார் வல்லுநர்களும் நாட்டிற்குத் தலைமை தாங்க முடியாது.

இலங்கையில் சிலர் வர்த்தகர்கள் மீதும் ஏனையவர்கள் மீதும் நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால் மக்களின் பிரச்சினைகளை அரசியல் அனுபவம் உள்ள, அரசியல் ரீதியில் முடிவெடுக்க கூடிய ஒருவராலேயே தீர்க்க முடியும்.

இலங்கையில் சில விடயங்களை சாதித்த, மக்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரிற்கு மக்கள் வாக்களிக்கவேண்டும்.

உண்மையான தலைவர் முன்னுதாரணத்தின் மூலம் தலைமை தாங்குபவர்.

சமாதானப் பேச்சுகளின் போது விடுதலைப் புலிகளிற்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் அவர்கள் அப்பாவிகளைக் கொலை செய்தனர்.

2009 இல் யுத்தம் முடிவிற்கு வந்த - விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட - நாளே எனது வாழ்க்கையின் மிக முக்கியமான நாள்.

அச்சம் என்பது பெரும் விடயம், நாங்கள் அச்சத்தின் பிடியின் வாழ்ந்துள்ளோம்,

1977 இல் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எங்கள் வீடுகள் அழிக்கப்பட்டன. அனைத்தும் அழிக்கப்பட்டன.எனது தந்தை தாக்கப்பட்டார்.

அனைவரும் இந்தியாவிற்கு சென்றனர். ஆனால் நாங்கள் செல்லவில்லை. நாங்கள் இங்கு வாழவிரும்பினோம். நான் இலங்கையன்.

இருதரப்புகளும் தவறிழைத்தன. ஒரு கட்டத்தில் அரசாங்கம் தவறிழைத்தது. பின்னர் விடுதலைப் புலிகள் தவறிழைத்தனர்.

அவர்கள் வாய்ப்புகளைத் தவறவிட்டனர்.

நாங்கள் அச்சத்துடனேயே வாழ்ந்தோம். நான் பெலவத்தையில் வசித்தவேளை எந்நேரமும் அரசியல்வாதியொருவர் தாக்கப் படலாம் என்ற அச்சத்தினால் நாடாளுமன்ற வீதியைப் பயன்படுத்துவதில்லை. கொழும்பும் அச்சத்துடனேயே வாழ்ந்தது.

தமிழர்கள் அச்சத்துடனேயே வாழ்ந்தனர்.

மக்களிற்கு யார் பாதுகாப்பு வழங்குவார் என்பதே இந்த தேர்தலில் முக்கியம்.

அவ்வாறான தலைவருக்கே நான் வாக்களிப்பேன். - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கோட்டாபயவை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாதை உடைந்து விழுந்ததில் பல வாகனங்கள் சேதமடைந்தமையுடன், சிலர் காயமடைந்தனர்.

'முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவை வரவேற்கிறோம்'என அமைக்கப்பட்டிருந்த பதாதையே நேற்றுக் காலை உடைந்து விழுந்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கோட்டாபய, தான் சூழலுக்கு நெருக்கமான தேர்தல் பிரசாரம் ஒன்றையே மேற்கொள்ளவுள்ளார் எனக் குறிப்பிட்டிருந்தார். எனினும் சூழல் மற்றும் பொது மக்களுக்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த பதாதைகள் தொடர்பில் பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

## நிதி அமைச்சர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று இடம்பெற்றுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள். முன்னாள் போராளிகள் போன்ற தரப்புகளுக்கு நிதி நிறுவனங்களினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட், நிதி அமைச்சின் செயலாளர்கள், அரச வங்கி அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online


## அதுவும் இதுவும் ஒன்றாகுமா?

விடுதலைப் போராட்டம் ஒன்றை துணிச்சலுடனும் தெளிவான கொள்கையோடும் முன்னெடுத்த தமிழர் தேசத்தை இராணுவக் கொடூரத்தின் மூலம், இரும்புக் கரம் கொண்டு, பெரும் யுத்தக் குற்றங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் மூலம் அழித்தொழித்த சிங்கள தேசம், இவ்விடயத்தில் தன் சமாளிப்புகளை வெளிப்படுத்துவதற்காக ஒரு அம்சத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதுண்டு.

அதனை மேல் மாகாண மற்றும் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்திலும் வந்து மீள ஒருதடவை கூறிச் சென்றிருக்கின்றார்.

“இலங்கையில் வடக்கில் மட்டும் மக்கள் படுகொலை செய்யப்படவில்லை. தெற்கிலும் கூட ஏராளமான இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட்டனர்” - என்று கூறுவதன் மூலம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு சமாதானம் கூற முற்படுகின்றார் அவர்.

ஆனால், தமது இத்தகைய கூற்றிலேயே முரண்நிலை பொதிந்து கிடக்கின்றமையை அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்ற தென்னிலங்கைப் பிரதிநிதிகள் பெரும்பாலும் மறந்து விடுகின்றார்கள்.

தெற்கில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) என்ற புதிய மார்க்ஸிஸ தீவிரவாத அமைப்பு 1971 இல் முன்னெடுத்த போராட்டத்தையும், அதைத் தொடர்ந்து 1980களின் பிற்பகுதியில் இடம்பெற்ற ஆயுத மோதல்களையும்தான் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிடுகின்றார்.

றோஹண விஜேவீரவால் 1970களின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆயுதக் கிளர்ச்சிக்கு அச்சமயம் செவ்வையான திட்டம் இருக்கவில்லை. ஒழுங்கான ஓர் ஆணைப் பீடத் தலைமையோ, நெறிப்படுத்தும் நிர்வாகமோ, புரட்சிகளைக் கொண்டு நடத்தும் கொள்கைத் தந்திரோபாயமோ கூட இன்றி அரைகுறைப் பிரசவமாகக் கட்டவிழ்ந்ததே அந்த ஆயுதப் புரட்சி.

புத்தகப் படிப்பால் பெற்ற இடதுசாரிப் புரட்சி சிந்தனையோடு, அதனால் ஏற்பட்ட பேரவாவுடன், ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீர நடைமுறைச் சாத்தியமற்ற முறையில் முன்னெடுத்த அந்தப் புரட்சி, இதே இலங்கை அரசுப் படைகளால் குரூரமான முறையில் அடக்கப்பட்டது.

வயதில் இளைய, அனுபவமற்ற, கற்றுக்குட்டிப் புரட்சியாளர்கள் மீது குரூரமான பதில் தாக்குதல்களை நடத்தி அழித்தன இலங்கைப் படைகள். பத்தாயிரத்துக்கும் அதிகமான சிங்கள இளைஞர்கள் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரம் இளைஞர்கள் காணாமல் போனார்கள். பதினையாயிரம் சிங்கள இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வேலையில்லாத் திண்டாட்டத்தினால் துயருற்று விரக்தியடைந்திருந்த இந்த இளைஞர்கள், இந்த இடதுசாரிப் புரட்சியினால் தமக்கும் நாட்டுக்கும் மீட்சி கிடைக்கும் என்று மனப்பூர்வமாக நம்பி அந்தத் தலைமைக்குப் பின்னால் அணிவகுத்தனர்.

ஆனால், தனது கொடூர இரும்புக் கரங்கள் மூலம் புரட்சிகர சிங்கள இளைஞர் பரம்பரை ஒன்று ‘பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை’ என்ற பெயரில் அரச படைகள் முன்னெடுத்த ‘அரச பயங்கரவாதம்’ மூலம் அழித்தொழிக்கப்பட்டது.

காருண்யம் மிக்க பௌத்தத்தின் சீலம் மிகுந்த நாடு எனக் கூறப்படும் சிங்கள தேசத்தின் மண்ணை, ஆறாய்ப் பெருக்கெடுத்தோடிய அந்தப் பல்லாயிரம் சிங்கள இளைஞர் களின் இரத்தம் கறைப்படுத்தியது.

1980களின் கடைசியில் மீண்டும் ஜே.வி.பி. ஆயுதப் புரட்சி துளிர்விட்டது. இலங்கையில் இந்தியப் படைகள் நிலைகொண்டிருக்கின்றமையைக் காட்டி அதையே விவகாரமாக்கிக் தனது கைவரிசையை மீளக் காட்டியது ஜே.வி.பி.

தெற்கில் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இழுத்து மூடப்பட்டன. பல மாவட்டங்களில் அரச நிர்வாகங்கள் சீர் குலைந்தன. பொதுப் போக்குவரத்து ஸ்தம்பித்தது. ஆயிரம் ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அரசியல் படுகொலைகள், விளக்குக் கம்பப் படுகொலைகள், மனிதப் புதைகுழிகள், சித்திரவதைகள், நதிகளில் மிதந்த பிணங்கள், எரியும் டயர்களோடு சேர்த்து வீதியில் சிதை மூட்டப்பட்ட உடலங்கள், மனிதக் கருகல்கள், காணாமலாக்கப்படுதல் என்று இந்தக் கொடூரமும் நீண்டது. அதுவும் அப்போதைய பிரேமதாஸா அரசினால் அதே இராணுவக் கொடூர முறையில் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்டது.

ஆனால் அந்தப் போராட்டங்களையும், நீதி, நியாயமான தீர்வையும், கௌரவ வாழ்வையும், பிறப்புரிமையான சுதந்திரத்தையும் நாடி உச்சக்கட்ட ஈகத்தோடு தமிழர்கள் நடத்திய விடுதலை வேள்வியையும் ஒப்பிட முடியாது.

சீரிய கொள்கை நோக்கு ஒன்றில்லாமல், ஒன்றுக்கு இரண்டு தடவைகள் மிக மோசமாக முன்னெடுக்கப்பட்டு, குரூரமாக அழித்தொழிக்கப்பட்ட அந்தப் போராட்டத்தின் பின்னரும், அதன் சூத்திரதாரிகள் இலங்கை அரசியலில் தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் யாரும் அரசியல் கைதிகளாக ஆண்டுக் கணக்கில் இல்லை.

ஆனால் வடக்கு, கிழக்கில் நடைபெற்றது தமிழரின் உரிமைப் போர் என்பதால் அங்கு இன்னும் இராணுவக் கெடுபிடி ஆக்கிரமிப்புத் தொடர்கின்றது. எங்கள் போராட்டத்தை அடக்கிய பயங்கரவாதச் சட்டம் நீடிக்கிறது. அரசியல் கைதிகள் பத்தாண்டுகள் கடந்தும் சிறையில் வாடுகின்றார்கள்.

இந்த முரணிலை அமைச்சர் சம்பிக்க போன்றோரின் கண்ணில்படாதமை வேதனைதான்!

# என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கண்காட்சியில் ஆளுநர் ராகவன்







யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும்என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா (Enterprise Sri Lanka) கண்காட்சிக்கு நேற்று முற்பகல் விஜயம் செய்த ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்அங்கு வருகை தந்த மாணவர்கள் மற்றும் பொது மக்களுடனும் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டமையுடன் வருகை தந்த சிலருக்கு ஜனாதிபதி செயலகத்தின் உணவு உற்பத்தி பிரிவினால் வழங்கப்படும் மரக்கன்றுகளையும் வழங்கினார்.

இதேவேளை ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பு பணிப்பாளர் பாரத தென்னக்கோன் ஆளுநருக்கும் மா மரக்கன்று ஒன்றினை வழங்கினார்.

# கொச்சின், மும்பை, புதுடில்லிக்குத்தான் பலாலியிலிருந்து முதலில் விமான சேவை

## ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடங்கும் என்றும் தகவல்

யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விமான சேவைகள் ஆரம்பிக்கப்படுவதுடன், பலாலி சர்வதேச விமான நிலையம் வரும் ஒக்ரோபர் 16ஆம் திகதி செயற்பட ஆரம்பிக்கும் என்று இலங்கை விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் எச்.எம்.சி.நிமலசிறி தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்தை இயக்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் இறுதி செய்யப்பட்டுள்ளன. பலாலியில் இருந்து கொச்சின், மும்பை, புதுடில்லிக்கு விமானங்கள் இயக்கப்படும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தியாவின் அலையன்ஸ் எயர் மற்றும் இன்டிகோ ஆகிய நிறுவனங்கள் பலாலியில் இருந்து விமான சேவைகளை ஆரம்பிக்க பேச்சுக்களை நடத்தி வருகின்றன எனப் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்குப் பின்னர் ஏனைய பிராந்திய விமான சேவைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கிடையே, பலாலி விமான நிலையத்தில் பணியாற்றுவதற்குத் தேவையான தமது திணைக்களத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பசன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சுங்கத் திணைக்களமும் பலாலியில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

அதேவேளை, பலாலி விமான நிலையத்தில் சுங்கத் தீர்வையற்ற வணிக நிலையமும் அமைக்கப்படவுள்ளது.

# மானிப்பாய் சந்தைக் கட்டட தொகுதி திறப்பு






வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாயில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதி நேற்று ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக கைளிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழா நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத் தொகுதியை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பற்றிக்நிரஞ்சன், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நாளை 10.09.2019 செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: துவாதசி பி.இ. 4.39 வரை
திதி : உத்தராடம் பி.ப. 02.19 வரை

இராகுகாலம் : 03.03 - 04.33
சுப நேரம் : 10.33 - 12.03

# முன்னாள் பாதுகாப்புச் செயலர், பொலிஸ் மா அதிபர் இருவர் மீதும் கொலை, கொலைச் சதிக் குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.09

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீது கொலை மற்றும் கொலைச் சதிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட வுள்ளன என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பிணையை மீளாய்வு செய்யக் கோரி, கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றது.



இந்த விசாரணைகளில் சட்டமா அதிபர் தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸே மேற்படி ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீது கொலை மற்றும் கொலைச் சதிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவுள்ளன என்று தெரிவித்தார்.

தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தாக்குதல்கள் குறித்து, இவர்கள் இருவருக்கும் அரச புலனாய்வு சேவையினால் திரும்பத் திரும்ப எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும், உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினர் என்றும் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் கூறினார்.

பொலிஸ் மா அதிபருக்கு 131 தடவைகளும், முன்னாள் பாதுகாப்புச் செயலருக்கு 97 தடவைகளும் தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பு தொடர்பான புலனாய்வு எச்சரிக்கைகள் அரச புலனாய்வு அமைப்புகளால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த எச்சரிக்கைகளைக் கவனத்தில் கொள்ளாமல், கொலைகள் இடம்பெறுவதற்கு காரணமாக இருந்துள்ளனர் என்ற அடிப்படையிலேயே இவர்களுக்கு எதிராகக் கொலை மற்றும் கொலைச் சதி வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன எனவும், பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 09

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

மாகியப்பிட்டி, பெருமாள் கடவை, சண்டிலிப்பாய் வைரவர் கோவிலடி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

இயக்கச்சி, இயக்கச்சி இராணுவமுகாம், North lanka agri food கரந்தாய், மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டார்குளம், கோவில்வயல் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் –**

பாலம்பிட்டி, தட்சணாமருதமடு, சின்னசிப்பிகுளம், தந்திரிமலை வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# விரும்பியவர்கள் கட்சியில் ரணிலுடன் இருக்கலாம்; விரும்பாதோர் வேறு அரசியல் முடிவுகள் எடுக்கலாம்

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

**கொழும்பு,செப்.09**
**ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவார் எனவும் இதற்கு விருப்பமில்லாதவர்கள் விரும்பியவாறு அரசியல் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உட்கட்சிக் கூட்டத்தில் கூறினார் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

சிரேஷ்ட அமைச்சர்களுடன் கடந்த 6 ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனை பிரதமர் கூறினார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்கள் லக்ஷ்மன் கிரியெல்ல, கபீர் ஹாசிம், அகிலவிராஜ் காரியவசம், காமினி ஜயவிக்ரம பெரேரா, ஜோன்



அமரதுங்க, ரவி கருணாநாயக்க, தயா கமகே மற்றும் சரத்பொன்சேகா ஆகிய கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதில் கலந்துகொள்ளவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சஜித் பிரேமதாஸவின் பிரதிநிதிகளாக கபீர் ஹாசிம், மலிக் சமரவிக்ரம, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர் எனவும் அமைச்சர் கிரியெல்ல அறிவித்துள்ளார்.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே பிரதமர் தனக்கு சகல தரப்பினரதும் ஆதரவு இருப்பதாக கூறினார் எனவும், கீழ் மட்டம் முதல், சகல மட்டத்தவர்களும் தான் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் அறிவித்தார் என்றும் அமைச்சர் கிரியெல்ல கூறினார்.

ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் ஆதரவும் தனக்கு இருப்பதாகவும் பிரதமர் கூறினார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




# தேர்தலுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி நியமனம்

கொழும்பு,செப்.09

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியாக இருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்தன தேர்தல்களுக்குப் பொறுப்பான அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தெரிவுக்குழுவின் செயற்பாடு மேலும் இரு வாரங்கள் நீடிப்பு

கொழும்பு,செப்.09

உயிர்த்த ஞாயிறன்று நடந்த பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் கால எல்லை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த தெரிவுக்குழுவின் கால எல்லை செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை கடந்த தடவை நீடிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அதனை நிறைவு செய்ய வாய்ப்பு இல்லை எனப் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், மேலும் இரண்டு வாரங்களுக்கு நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் கால எல்லையை நீடிக்கும் யோசனையை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின்போது சபாநாயகருக்கு முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



# தெலுங்கானா ஆளுநராக தமிழிசை பதவியேற்றார்

ஐதராபாத்,செப்.09

தெலுங்கானா மாநில ஆளுநராக வைத்தியர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்றுப் பதவியேற்றார். அவருக்கு அம்மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த வைத்தியர் தமிழிசை சவுந்தரராஜனை, தெலுங்கானா மாநில ஆளுநராக நியமித்து ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஆணை பிறப்பித்தார்.

இதையடுத்து, தலைவர் பதவி மற்றும் பா.ஜ.க வின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் தமிழிசை சவுந்தரராஜன் விலகினார்.

இந்தநிலையில், தெலுங்கானா மாநில ஆளுநராக வைத்தியர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று பதவியேற்றார்.

ஐதராபாத்தில் உள்ள ராஜ்பவனில் நேற்றுக் காலை 11 மணிக்கு நடைபெற்ற பதவியேற்பு விழாவில், தெலுங்கானா மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ராகவேந்திரா எஸ்.சவுகான், வைத்தியர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு ஆளுநராக பதவி பிரமாணம் செய்து வைத்தார்.இந்த விழாவில் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் பங்கேற்றார்.

மேலும், தமிழகம் சார்பில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், தே.மு.தி.க. சார்பில் பிரேமலதா விஜயகாந்த், சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

(உ)

# முதலாம் வகுப்பு மாணவனின் விளையாட்டுத்தனத்தால் விபரீதம்



சேலம் அருகே முதலாம் வகுப்புப் படிக்கும் பள்ளிச் சிறுவன் வீட்டிலிருந்து கொண்டுவந்த இரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகளை விளையாட்டுத்தனமாக சக மாணவர்களின் குடிதண்ணீர் கலன்களில்கலந்ததில், அதனைக் குடித்த 8 மாணவர்களுக்கு மயக்கம் ஏற்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏ. குமாரபாளையம் ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளியில் மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு பள்ளி மாணவர்கள் 8 பேர் திடீரென மயங்கிச் சரிந்துள்ளனர். அங்கு முதலாம் வகுப்புப் படிக்கும் சிறுவன் ஒருவன் கொண்டுவந்த மாத்திரைகள் சிலவற்றை குடிதண்ணீர் போத்தல்களில் கலந்தமையும் அதனை மாணவர்கள் பருகியமையும் தெரியவந்தது.

மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களை பரிசோதித்த மருத்துவர்கள், இரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகள் கலந்த நீரை சிறுவர்கள் பருகிஉள்ளனர் எனக் கூறியுள்ளனர். தற்போது 8 மாணவர்களும் நலமுடன் உள்ளனர் எனவும் அச்சப்படத் தேவை இல்லை என்றும் மருத்துவர்கள் கூறினர்.

மாத்திரைகள், மருந்துகள் உள்ளிட்டவற்றை குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைக்க வேண்டும் என்ற எச்சரிக்கை வாசகங்களைக் கவனமுடன் பின்பற்ற வேண்டும் என்பதை இந்தச் சம்பவம் உணர்த்தியுள்ளது.



# விநாயகர் சிலை கரைக்கும்போது ஆற்றில் மூழ்கி 6 பேர் உயிரிழப்பு

## குஜராத்தில் பரிதாபம்

அகமதாபாத், செப்.09

குஜராத் மாநிலத்தில் விநாயகர் சிலையைக் கரைத்த போது ஆற்றில் அடித்து செல்லப்பட்டு 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குஜராத்தின் ஆரவல்லி மாவட்டத்தில் உள்ள ஹடோல் கிராமத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில், சனிக்கிழமை மாலை கிராமத்தினர் ஒன்றிணைந்து அந்த விநாயகர் சிலையை அருகில் உள்ள வட்ரக் ஆற்றில் கரைக்க கொண்டு சென்றனர். சிலையை கரைத்த பின்னர் அனைவரும் ஆற்றில் குளித்தனர்.

அப்போது, ஆற்றின் ஆழமான பகுதிக்குச் சென்று குளித்துக் கொண்டிருந்த 6 பேர் திடீரென தண்ணீரில் அடித்துச்செல்லப்பட்டனர்.

இதுகுறித்துதகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மீட்புக் குழுவினர் காணாமல் போனவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட 6 பேரின் உடல்களையும் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# கால்வாயைத் தூர் வாராமலேயே ரூ.5 லட்சம் சுருட்டிய அதிகாரிகள்



மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே பாசனக் கால்வாயைத் தூர்வாராமலேயே அரசு அதிகாரிகள் 5 லட்சம் ரூபா செலவுக் கணக்குக் காட்டி பணத்தைச் சுருட்டி விட்டனர் என விவசாயிகள் முறைப்பாடு கூறியுள்ளனர்.

முள்ளிப்பள்ளம் கிராமத்தில் உள்ள குடமுறட்டி கால்வாய் மூலம் சுமார் 300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இக்கால்வாயை தூர்வார நடவடிக்கை எடுக்கும்படி வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயிகள் மனு அளித்தனர்.

அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் விவசாயிகளே, சொந்த பணத்தில் ஜே.சி.பி. இயந்திரங்கள் மூலம் 7 நாள்களில் தூர்வாரியுள்ளனர்.

இந்தநிலையில், அக்கால்வாயை 5 லட்சம் ரூபா செலவில் தூர்வாரியதாகத் தெரிவித்து, மக்களின் கண்களுக்கு தென்படாத இடத்தில் கல்வெட்டை அமைத்து அதிகாரிகள் புகைப்படம் எடுத்துச் சென்றனர் என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதற்கு தாங்கள் கண்டனம் தெரிவித்ததும், கல்வெட்டை அதிகாரிகள் இடித்து அகற்றி விட்டனர் எனவும், எனவே, கால்வாயை தூர்வாராமலேயே 5 லட்சம் ரூபாயை கணக்குக் காட்டிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மும்பையில் 3 வயதுக் குழந்தை மாடியில் இருந்து வீசி கொலை

மும்பை,செப்.09

மும்பையில் மூன்று வயது பெண் குழந்தை இரக்கமின்றி 7 ஆவது மாடியில் இருந்து தூக்கி வீசிக் கொலை செய்யப்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏழாவது மாடியில் இருந்து கீழே விழுந்ததும் சம்பவ இடத்திலேயே அந்த பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் மும்பை, கொலாபா பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது. குழந்தையினுடைய தந்தையின் நண்பர் குழந்தையை 7 ஆவது மாடியில் இருந்து தூக்கி வீசிக்கொலை செய்துள்ளார்.

அவரை கொலாபா பகுதி பொலிஸார் கைது செய்து வழக்குப்பதிவு செய்துள்ளனர். குழந்தையைத் தூக்கி வீசி கொலை செய்ததற்கான காரணம் குறித்தும் பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# 3.3 ரிச்டர் அளவில் அசாமில் நிலநடுக்கம்

கவுகாத்தி,செப்.09

அசாம் மாநிலத்தில் அமைந்துள்ள கார்பி அங்லோங் பகுதியில் நேற்றுக் காலை 7.03 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 3.3 ரிச்டர் அளவில் பதிவாகி உள்ளது என இந்திய வானிலை ஆய்வு அமைப்பு தெரிவித்து உள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

ஏற்கனவே, நேற்று அதிகாலை 12.05 மணிக்கு இமாசல பிரதேசத்தில் 3.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் கையிருப்பை கூட்டுகிறது ஈரான்!

## அந்நாட்டு அதிபர் ஹசன் ருஹானி

டெஹ்ரான்,செப்.09

அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் கையிருப்பை ஈரான் அதிகரிக்கிறது. இந்த நடவடிக்கை தங்களுக்கு வியப்பு அளிக்கவில்லை என்று அமெரிக்கா கூறுகிறது.

அமெரிக்காவில் ஒபாமா ஜனாதிபதியாக இருந்தபோது, கடந்த 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் வரலாற்று சிறப்பு மிக்க அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ஈரான் ஏற்படுத்தியது.

அதன் பின்னர் 2 ஆண்டுகள் கழித்து அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. அந்த ஒப்பந்தம், ஈரான் அணு ஆயுத தயாரிப்பை கட்டுக்குள் வைக்கவும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அந்த நாட்டின் மீது விதித்த பொருளாதாரத் தடைகளை படிப்படியாக விலக்கி கொள்ளவும் வழி வகுத்தது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டிரம்புக்கு உடன்பாடு இல்லை. இது அமெரிக்க நலனுக்கு எதிரானது எனக் கூறி இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக கடந்த ஆண்டு அவர் அறிவித்தார். அத்துடன் ஈரான் மீது பொருளாதார தடைகளை விதித்தார். இதனால் ஈரானின் பொருளாதாரம் சீர்குலைந்தது.

அமெரிக்காவின் நடவடிக்கையில் கடும் அதிருப்தி அடைந்த ஈரான், அந்த நாட்டுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தப்போவதில்லை என்று கூறியது.

இந்த நிலையில் அணு ஆயுதங்கள் தயாரிக்கப் பயன்படுகிற செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பை அதிகரிப்பதற்கு ஈரான் நடவடிக்கை எடுக்கப்போவதாக தகவல்கள் வெளிவந்தன. இது உறுதியாகி உள்ளது.



இதுபற்றி ஈரான் அணுசக்தி அமைப்பின் செய்தி தொடர்பாளர் பெஹ்ரூஸ் கமல்வாண்டி, டெஹ்ரானில் நேற்று முன்தினம் கூறியவை வருமாறு:–

நடான்ஸ் நகரில் உள்ள ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் மையத்தில், அதி நவீன எந்திரங்கள் மூலம் யுரேனியம் செறிவூட்டல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா கடந்த ஆண்டு ஒருதலைபட்சமாக அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகிய நிலையில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது நடவடிக்கை இது.

இந்த ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டிருந்த எங்களது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான வரம்புகளை நாங்கள் உயர்த்தத் தொடங்கி உள்ளோம்.

நடான்ஸ் நகர யுரேனியம் செறிவூட்டும் மையத்தில் உள்ள எந்திரங்கள், முந்தைய எந்திரங்களின் திறனை விட பல மடங்கு அதிகம் திறன் கொண்டவை ஆகும். இவை 6 ஆம் திகதி (கடந்த வெள்ளிக்கிழமை) செயல்படத் தொடங்கி விட்டன.

எதிர்த்தரப்பினர் (அமெரிக்கா) தங்கள் வாக்குறுதிகளை செயல்படுத்தாத நிலையில், ஈரான் மட்டும் தனது வாக்குறுதிகளின்படி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. எங்கள் யுரேனியம் கையிருப்பு விரைவாக அதிகரிக்கும். இதை அவர்கள் (அமெரிக்கா) புரிந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

அதே நேரத்தில் சர்வதேச அணுசக்தி முகமை, எங்கள் அணுசக்தி திட்டத்தை கண்காணிப்பதை நாங்கள் அனுமதிப்போம்.

– இவ்வாறு அவர் கூறினார்.

அதே நேரத்தில் செறிவூட்டிய யுரேனியம் கையிருப்பை அதிகரிக்கும் ஈரானின் அதிரடி நடவடிக்கை தங்களுக்கு வியப்பைத் தரவில்லை என்று அமெரிக்கா கூறுகிறது.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவ மந்திரி மார்க் எஸ்பர், பாரீஸ் நகரில் கருத்து தெரிவிக்கையில், ஈரான் யுரேனியம் கையிருப்பை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பது எனக்கு வியப்பு அளிக்கவில்லை. அவர்கள் அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி விட்டனர் எனக் கூறினார்.

(உ)

# சீனாவில் 10 கோடிக்கும் அதிகமான பன்றிகள் பன்றிக் காய்ச்சலால் பலி!



சீனாவில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 10 கோடிக்கும் அதிகமான பன்றிகள் பலியானமையடுத்து, அவசரகாலத்திற்காக சேமித்து வைக்கப்பட்ட பன்றி இறைச்சியை சீன அரசு விடுவிக்க உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

உலகில் உள்ள 50 சதவீதம் பன்றிகளுக்கு சீனா வாழ்விடமாக உள்ளது. சர்வதேச அளவில் பன்றி இறைச்சிக்கான மிக பெரிய சந்தையாக இருக்கும் சீனாவில், மக்களின் பிரதான உணவாகவும் பன்றி இறைச்சி உள்ளது. இந்த நிலையில் அந்நாட்டில் ஆபிரிக்க பன்றி காய்ச்சலால் பாதிக்கப்பட்டு முக்கால்வாசிப் பன்றிகள் பலியாகியுள்ளன எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனால் அங்கு சந்தை ரீதியாகவும், மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பன்றி இறைச்சியின் தட்டுபாட்டினால் அதன் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பன்றி பண்ணை வைத்திருப்பவர்களுக்கு அந்நாட்டு அரசு மானியம் வழங்கி வருகிறது. கடந்த ஆண்டை விட 90 சதவீதம் அதிக விலைக்கு கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பன்றி இறைச்சியை விற்பனையாளர்களிடம் இருந்து மொத்த விலை வியாபாரிகள் வாங்கிய நிலையில், அவர்களிடம் இருந்து சிறு வியாபாரிகள் 70 சதவீதம் அதிக விலைக்கு இறைச்சியை பெறுகின்றனர். இதனால் தொடர்ந்து இறைச்சியின் விலை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

### ஒரு ரூபாய்க்கு துணி என அதிரடி சலுகை

# 5 நிமிடத்தில் கடையை காலி செய்த பெண்கள்!

மொஸ்கோ,செப்.09

ரஷ்யாவில் ஒரு ரூபாய்க்கு துணிகளை விற்பதாக அதிரடி சலுகை அறிவித்த கடைக்குள் புகுந்த பெண்கள் 5 நிமிடத்தில் கடையை காலி செய்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.



ரஷ்யா நாட்டின் விளாடிகவ்கஸ் என்ற நகரில் அமைந்துள்ள ஷொப்பிங் சென்டரில் ஸ்டோலிஸ்டா என்ற துணிக்கடை செயல்பட்டு வருகிறது.

இந்தக் கடை வாடிக்கையாளர்களை கவர அதிரடி சலுகை ஒன்றை வெளியிட்டது. அதன்படி, இந்திய மதிப்பில் ஒரு ரூபாய் என்ற விலையில் துணிகள் விற்கப்படும் என அறிவித்தது. இந்த அறிவிப்பைக் கண்டதும் பெண்கள் கூட்டம் அந்த கடையின் முன் திரண்டது. கடை திறந்த மறுவினாடியே கடைக்குள் பெண்கள் திபுதிபுவென உள்ளே நுழைந்தனர். அவர்கள் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த துணிகளை தங்கள் கைகளில் அள்ளிக் கொண்டனர்.

ஒரே துணிக்கும், பிறர் கையில் வைத்திருக்கும் துணியைப் பறிக்கவும் நடந்த போட்டியில் சிறிது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. கடை திறக்கப்பட்ட ஐந்தே நிமிடத்தில் அங்கிருந்த துணிகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன.

# ஆஸியில் குயின்ஸ்லாந்து உள்ளிட்ட 2 மாநிலங்களில் பற்றி எரியும் புதர்கள்

ஆஸ்திரேலியாவில், புதர் மண்டிய இடங்களில் பற்றி எரியும் தீயை அணைக்க தீயணைப்பு துறையினர் போராடி வருகின்றனர்.

அந்த நாட்டில் உள்ள குயீன்ஸ்லாந்து மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய இரு மாநிலங்களில், வறண்ட வானிலை காரணமாக புதர்மண்டிய இடங்களில் தீப்பற்றி எரிந்து வருகிறது. சுமார் 100 இற்கு மேற்பட்ட இடங்களில் ஆங்காங்கு தீப்பற்றி எரியும் நிலையில், வீரர்கள் அவற்றை அணைக்க போராடுகின்றனர்.

எனினும், காற்றின் வேகம் காரணமாக கொழுந்து விட்டு எரியும் தீ, சுமார் 21 வீடுகளை நாசமாக்கி உள்ளது. விண்ணை முட்டும் கரும்புகையால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இதனிடையே மக்கள் அதிகம் வசிக்கும் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் 60 இற்கும் அதிகமான இடங்களில் தீப்பற்றி எரிவதால், அதனை அணைத்து, தீயை கட்டுக்குள் கொண்டு வருவது குறித்து அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

(உ)



# தென் துருவத்தை துருவும் ஓர் உயிர் பணயப் பயணம்!




பாற்கடல் மு.சிவநேசன்

ஆதர்சிகிளாக்கின்விண்வெளிகற்பனை கதைகள் பற்றி அதிகம் பேசப்படுகிறது. பல சர்வ தேச விருதுகளையும் அவர்வென்றுள்ளார். எமது புராணங்கள் சாஸ்திரங்கள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள விண்வெளி பற்றிய உண்மைகள் மூட நம்பிக்கைகள் என்ற போர்வையில் உதா சீனப் படுத்தப்பட்டாலும் அவற்றின் ஆச்சரிய மூட்டும் சில உண்மைகள் நிதாசனமாகி வருகின்றன. ஒரு மேற்கத்தையர் வந்து உறுதிப்ப டுத்தும் வரை அவற்றை நாங்கள் நவீன புத்திஜீவிகள் நம்பப் போவதில்லை.

கிரகங்களின் தாக்கம் ஒவ்வொரு மனிதனிலும் ஏற்படுத்தும் வேறுபாடுகள் பற்றிய சிக்கலான துல்லியமான கணிப்புக்கள் காலாகாலமாக ஏற்கப்பட்டும் நம்பப்பட்டுமே வந்திருக்கின்றன. ஆதியான மெய்ஞ்ஞானம் விஞ்ஞானத்திற்கு சளைத்தது இல்லை என்பதற்கு எமது பஞ்சாங்க கணிப்புக்களே ஆதாரம் என்றால் மிகையாகாது.

சந்திரனிலும் செவ்வாயிலும் மனிதனைக் குடியேற்ற முயற்சிகள் வலுக்கின்றன. பூமியில் உள்ள பல பிரச்சினைகளுக்கே இன்னமும் தீர்வு காணப்படாத, புதிர்கள் விடுவிக்கப்படாத நிலைமையில் இந்த முயற்சி.

இயற்கை அனர்த்தங்கள் பற்றி சரிவர எதிர்வு கூற முடியாத கையாலாகாத் தனத்தில் நாங்கள் இருக்கிறோம். இயற்கையை கெடுப்பதில் மனிதன் முனைப்புடன் இருக்கிறான். போதாதென்று யுத்தங்கள் பேதங்கள் வேறு நிலைமையைச் சிக்கல் ஆக்குகின்றன.

திருகோணமலையில் கடலுக்கு அடியில் அமிழ்ந்து போயிருக்கும் கோணேசர் ஆலயம் பற்றி சுழியோடி பல விடயங்களை ஆதர் சி கிளாக் இங்கிலாந்தில் இருந்து வந்து கண்டு பிடித்து தந்திருக்கிறார். கடல்கோளால் தாழ்ந்து கிடக்கும் குமரிக் கண்டம் பற்றிய விவரங்கள் ஊகங்களாகவே உலா வருகின்றன.

இமயமலை ஏறவும் இங்கிலாந்தில் இருந்து தான் வருகிறார்கள். இமயம் கைலாயம் பற்றியெல்லாம் புராண இதிகாசங்கள் நிறையவே வருணித்து இருக்கின்றன. அங்கெல்லாம்கூட புனிதம் கெடும் வகைளில் குப்பைகள் குவிகின்றன. ஆய்வுகளும் வலுக்கின்றன.

அமேசன் காடுகள் தீப்பற்றி எரிகின்றன. உலகின் நுரையீரல் எனப்படும் அவை எரிவது பற்றி பிறர் கவலைப்படத் தேவையில்லை, அது உள்நாட்டுப் பிரச்சினை என்ற தோரணையில் பிறேசில் கருத்து வெளியிட்டு வருகிறது. ஆனால் உலகினுக்கு தேவையான ஒட்சிசனில் இருபது வீதத்தை அமேசன் காடுகளே வழங்கி வருகின்றன.

ஓர் உயிரைப் பறிக்கும் உரிமை அதனை உருவாக்கும் தாய்க்கும் கூட கிடையாது. ஏன் தற்கொலை செய்யும் உரிமைகூட ஒருவனுக்கு கிடையாது. அது போலவே நாடுகளும்கூட பூமியை சொந்தம் கொண்டாட முடி யாது. அது மனிதனின் மட்டு மல்ல அனைத்து உயிர்களினதும் பொதுச் சொத்து ஆகின்றது.

உலக வெப்பமயமாதல் பற்றி அதிகம் பேசப்படுகிறது. இமயமலையிலும் துருவப் பகுதிகளிலும் பனிப் பாறைகள் உருகி வருகின்றன. கடல் மட்டம் உயர்ந்து வருகிறது.

உலகம் பூகோள ரீதியாக ஐந்து சமுத்திரங்களையும் ஏழு கண்டங்களையும் கொண்டி ருக்கிறது. இவற்றில் விநோத மானவையாக வட துருவத்தில் உள்ள ஆக்டிக் சமுத்திரம் தென் துருவத்தில் உள்ள அன்ராடிக்கா கண்டம் என்ப வற்றை குறிப்பிடலாம். இங்கு மனித சஞ்சாரம் இல்லை என்றே கூறலாம்.

இமயத்தின் உச்சிக்கு – உயிரைப் பணயம் வைத்து உலகின் உச்சிக்கு பய ணம் செய்வது போல இந்த வட தென் துருவங் களை நோக்கியும் உலகின் தொலைவிற்கு ஆய் வாளர்கள் படையெடுக்கத்தான் செய்கிறார்கள்.

புவியியல் ரீதியாக கூறப் போனால் உலகின் தென் துருவம் அன்டாட்டிக்கா கண்டத்தில் அமைந்துள்ளது. இது தென் சமுத்திரத்தால் சூழப்பட்ட 14.2 மில்லியன் சதுர கி.மீ அளவுடைய அதாவது ஐந்தரை மில்லியன் சதுரமைல் பரப்புடைய உலகின் ஐந்தாவது பெரிய கண்டம் ஆகிறது. ஐரோப்பா கண்டத்தை விட இது பெரியது. தரைப் பரப்பை சுமார் இரண்டு கி.மீ தடிப்புடைய பனிக் கட்டி போர்த்தி உள்ளது.

இதன் வெப்பநிலை – 60 °C வரை குறைய வல்லது. அதி உச்சமாக கோடையில் 10°C யை எட்டக் கூடும்.

தென் சமுத்திரத்தை நெருங்கி அத்திலாந்திக், இந்து மற்றும் பசுபிக் சமுத்திர தென் பிராந்தியங்கள் வளைத்துள்ளன. கடல் எனக் கருதப்பட்டிருந்த இத் தரைப்பரப்பு 1820 இல் தான் கண்டமாக ரஷ்யர்களான Bellingshausen, Mikhail Lazarev ஆகியோரால் இனங்காணப்பட்டிருந்தது. 1821 இல் சீல் வேட்டையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கரான John Davis என்பவர் இங்கு தரையிறங்கினார் எனக் கூறப்படுகிறது. மீண்டும் ஆய்வுகள் கிடப்பில் போடப்பட்டன. அதற்கு முன்னர் அங்கு மனிதர்களின் நடமாட்டம் பற்றிய எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. காலநிலை சூழ்நிலை நட்பானதாகவோ இசை வாகவோ இருக்கவில்லை. மீண்டும் 1895 இல் நோர்வே குழு ஒன்று திமிங்கிலங்களைத் தேடிவந்தபோது அங்கே தரையிறங்கி இருந்தது. அதன் பின்னர் பலநாடுகள் இக் கண்டத்தின்மீது ஆர்வம் கொண்டன. உரிமை கொண்டாட முயன் றன. விஞ்ஞான ஆய்வுகளுக்கு மட்டும் அங்கு இடம் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

பனிப்பாளங்களில் நீர்நாய்கள் (seals) மற்றும் பென்குயின்களின் இயல்பான வாழ்க்கை மனிதத் தலையீடு அதிகம் இல்லாத சுதந்திரமான உல்லாசம்தான்.

இராணுவத் தேவைகள், அகழ்வு நடவடிக்கைகள் அணுக்கதிர் பரிசோதனைகள், கழிவுகளை கொட்டுதல் போன்ற செயற்பாடுகளுக்கு அங்கே இடமில்லை என முடிவு செய்யப்பட்டது.

ஆக்டிக் என்பது வடக்கையும் அதற்கு எதிரான பதமாக அன்ராட்டிக் என்பது தெற்கையும் குறிக்கும் கிரேக்க றோமன் மொழி அடிப்படையில் இது பெயரிடப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தென் துருவத்தை அடைவதில் பிரிட்டன் தீவிரம் காட்டியது. முதல் மனிதனாக தென் துருவத்தில் காலடி பதித்து வரலாற்றுச் சாதனை படைக்க அது நினைத்தது. Robert Falcon Scott என்ற பிரித்தானிய கடற்படை அதிகாரி குழுவினர் 1901 – 1904, மீண்டும் 1910 – 1913 என இரு தட வைகள் தென் துருவத்தை அடைய முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.



இடையில் 1907 இல் பிரித்தானிய Nimrod பயணம் என்பது Ernest Shackleton என்பவரால் மேற்கொள்ளப்பட்டும் பல சாதனைகள் நிகழ்த்தப் பட்டும் தென் துருவ பீடபூமியை நெருங்கி பாதம் பதித்து இருந்தும் காந்த துருவ மையத்தை மயிரிழையில் தவறவிட்டு சாதனையை எட்ட முடியாமல் போய் விட்டது.



இவர்கள் அங்குள்ள இரண்டாவது பெரிய எரிமலையான Mount Erebus இனை ஏறியிருந்தனர். றொஸ் கடலை குறுக்கே கடந்து இருந்தனர். பல சாதனைகளை நிறைவேற்றி விட்டனர். அன்றைய வசதிகளை கொண்டு இவர்கள் செய்த சாதனைகள் மகத்தானவை என்றே கூறவேண்டும்.

14 டிசெம்பர் 1911 இல் நோர்வே குழுவைச் சேர்ந்த Roald Amundsen என்பவரே முதன் முதலில் தென் துருவ காந்த மையத்தை சரிவர எட்டியவர் ஆவார். ஒவ்வொரு குழுக்களும் வெவ்வேறு வழிகளினூடாக துருவத்தை அடைய முயற்சித்து இருந்தன. பலரின் வழிகள் இலக்கினை எட்ட வழிவிடவில்லை என்பது துரதிஷ்டமே.

(இன்னும் வரும்)

# சு.கவின் அதிரடி நகர்வுகள் கடைசி நேரத்தில்தானாம்!

## இப்படிக் கூறுகின்றார் சந்திரிகா

கொழும்பு,செப்.09
2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், கடைசி நேரத்தில் பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டமையைப்



போன்று, இந்த ஜனாதிபதி தேர்தலிலும் இறுதி நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிரடி காட்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

சர்வதேச செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் நான் பங்கேற்றிருந்தேன். அந்தக் கட்சி எனது தாய் வீடு. அந்தக் கட்சியிலுள்ள களைகளை அகற்ற வேண்டும். அந்தக் கட்சிக்கு விசுவாசமானவர்களுடன் தொடர்ந்தும் இருப்பேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர் வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இப்போது முடிவை வெளியிடாது. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் இறுதி நேரத்தில் இடம்பெற்றதைப் போன்று அதிரடியான முடிவை எடுக்கும். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ரணில் முதுகெலும்புள்ளவர்; சஜித்துக்கு அது உண்டா?

## இப்படிக் கேட்கிறார் மஹிந்தர்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு முதுகெலும்புள்ளது என்பதை நிரூபித்துள்ளார் எனவும் முடியுமானால் சஜித் பிரேமதாஸவும் நிரூபிக்கட்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவிசாவளையில் நேற்றுமுன்தினம் தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சி ஏற்பாடு செய்த கோட்டாபய ஆதரவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க இன்று தான் ஜனாதிபதி வேட்பாளராக வருவதாக அறிவித்துள்ளார். அவருக்கு அந்த பலம் இருக்கின்றது. சஜித் பிரேமதாஸவும் முடியுமானால் இவ்வாறு அறிவிக்கட்டும்.

அவர் இவ்வாறு அறிவிப்பாரா? அல்லது ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சில் ஈடுபட்டதன் பின்னர் பிரத



மர் பதவியை தருவதாக கூறியவுடன் ரணிலின் வலையில் விழுவாரா? எனவும் பொறுத்திருந்து பார்ப்போம்.

எமக்கு இவர்கள் தனியாக வந்தாலும் சரி, சேர்ந்து வந்தாலும் சரி ஒரு பொருட்டல்ல. நாம் வெற்றி பெறுவது நிச்சயம். - எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஓமந்தையில் வாள்வெட்டுச் சம்பவம் இரு பெண்கள் உட்பட 6 பேர் காயம்

வவுனியா - ஓமந்தை மாணிக்கர் வளவு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதல்களில், 6 பேர் காயமடைந்து நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணிக்கர்வளவை சேர்ந்த இருதரப்பிற்கும் இடையில் நேற்றுமுன்தினம் சிறு முரண்பாடு ஏற்பட்டிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக நேற்றுமுன்தினம் இரவு வீடொன்றிற்குள் நுழைந்த இளைஞர் குழுவினர் அங்கிருந்தவர்கள் மீது வாளால் வெட்டியமையுடன், மான் கொம்பினாலும் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்கள் மற்றும் பெண் ஒருவரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டியும் சேதத்திற்குள்ளாகியது.

அதே சம்பவத்தில் காயமடைந்தனர் எனத் தெரிவித்து மற்றொரு பெண் உட்பட மூவருமாக மொத்தம் 6 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மதுபோதையில் நின்றிருந்த இரண்டு இளைஞர்களை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# வெளிநாட்டு சக்திகளின் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பாராம் கோட்டாபய!



கொழும்பு,செப்.09
நாடுதற்போது பல்வேறு வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளதாகவும், அவற்றின் பிடியிலிருந்து நாட்டை விடுவித்து அதனைப் பொருளாதார கேந்திர நிலையமாகத் தாம் மாற்றுவுள்ளார் எனவும் பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவிசாவளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மஹாஜன எக்சத் பெரமுன (மக்கள் ஐக்கிய முன்னணி) கட்சியின் சம்மேளனக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் உள்ள மிக முக்கியமான பொருளாதார மையங்கள் அந்நியமயப் படுத்தப்படவில்லை எனவும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரம் கட்டமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# எதிர்பாராத நேரத்தில் திரும்பவும் இங்கு பயங்கரவாதத் தாக்குதல்கள்

## நடக்கும் என எச்சரிக்கின்றார் ஞானசாரர்



கொழும்பு,செப்.09
எதிர்வரும் நாள்களில் மீண்டும் எதிர்பாராத நேரத்தில் பயங்கரத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன எனப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் வண. கலகொடஅத்தே ஞானசார தேரர் எச்சரித்துள்ளார். எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் மாவெல்ல பிரதேசத்தில் புத்தர் சிலை உடைப்பதற்குத் தலைமைத்துவம் வழங்கிய மௌலவி கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலுக்கு அமைய இலங்கையில் 9 மாகாணங்களில் தாக்குதல் மேற்கொள்வதற்கு திட்டமிருந்ததாகச் செய்தி வெளியாகி இருந்தது.

2027ஆம் ஆண்டில் இந்த நாட்டைப் பிடிக்க சில சக்திகள் திட்டமிட்டுள்ளன. அதற்காக இந்த 9 தாக்குதல்களும் மேற்கொள்ளப்படும். அது மாத்திரமின்றி மேலும் பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உள்ளன.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இந்தத் தாக்குதலை நிறுத்தி விடலாம் என நான் நினைக்கவில்லை. ஏன் என்றால், அவர்கள் நாட்டிற்குள் கும்பலாக உள்ளனர். அதற்கமைய எதிர்பாராத இரண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால், அது சஹ்ரானின் தாக்குதல் போன்றிருக்கும்.

அப்படி தாக்குதல் மேற்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. பல பில்லியன் டொலர் பணம் நாட்டிற்குள் வந்துள்ளது. அந்த பணம் எப்படி வந்ததெனத் தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் 20 ஆம் திகதி ஜனாதிபதி சாட்சியம்

கொழும்பு,செப்.09
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 20 ஆம் திகதி முன்னிலை யாகி சாட்சியம் அளிக்கவுள்ளார். நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் அல்லது ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் சாட்சிப் பதிவுகளை, மேற்கொள்வார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இதுவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, சட்டம் மற்றும் ஒழுங்குகள் முன்னாள் அமைச்சர்களான சாகல ரத்னாயக்க மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரிடம் சாட்சிப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



LATHA TAILORING & EMBROIDERY DESIGNING
SAREE BLOUSE
EMBROIDERY WORK
WOMEN'S & MENS ALTERATION
COUSTUMES
CHUBIDAR & MORE AVAILABLE



Unit 8 Champion Mall
495 High Road
Wembley HAO 2DH
Tel:07459 078 919

# ஆஷஸ் 4 ஆவது டெஸ்ட்:
# வெற்றியை நோக்கி ஆஸி.

ஆஷஸ் தொடரின் 4 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

ஆஸி. அணி முதல் இன்னிங்ஸில் 497 - 8 ஓட்டங்களைக் குவித்தது. இதைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 200 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நான்காம் நாளான சனிக்கிழமை இருவரும் ஆட்டத்தை தொடர்ந்த நிலையில், பென் ஸ்டோக்ஸ் 26 ஓட்டங்களுக்கும், பேர்ஸ்டோ 17 ஓட்டங்களுக்கும் வெளியேறினர்.

ஜோப்ரா ஆர்ச்சர் 1, ஸ்டுவர்ட் பிராட் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில், ஜோஸ் பட்லர் மட்டுமே கடைசியில் நிலைத்து ஆடி 41 ஓட்டங்களைச் சேர்த்து வெளியேறினார். ஜேக் லீச் 4 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

107 ஓவர்களில் 301 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது இங்கிலாந்து.

ஆஸி. தரப்பில் ஜோஷ் ஹேஸல்வுட் 4 - 57, பேட் கம்மின்ஸ் 3 - 60, ஸ்டார்க் 3 - 80 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

இதையடுத்து ஆஸி. அணி 196 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

ஆஸி. 115/4: பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய ஆஸி. அணி ஆரம்பத்திலேயே அதிர்ச்சியைச் சந்தித்தது. அதிரடி வீரர் டேவிட் வோர்னர் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார் ஸ்டுவர்ட் பிராட். ஆஷஸ் தொடரில் தொடர்ந்து 5 ஆவது முறையாக வார்னரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார் பிராட். மார்கஸ் ஹாரிஸ் 6, மார்னஸ் லேபுச்சேன் 11, டிராவிஸ் ஹெட் 12 என சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடி வந்த ஸ்டீவ் ஸ்மித் தனது 26 ஆவது டெஸ்ட் அரைசதத்தை பதிவு செய்தார்.

33 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 115 ஓட்டங்களை எடுத்திருந்தது ஆஸி. ஸ்மித் 58, வேட் 22 ஓட்டங்களுடன் ஆடிக் கொண்டிருந்தனர்.

ஸ்மித் 82 ஓட்டங்களுடனும், மேத்யூ வேட் 34 ஓட்டங்களுடனும் வெளியேறினர். டிம் பெயின் 23, ஸ்டார்க் 3 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

42.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்களை எடுத்திருந்த ஆஸி.அணி தனது ஆட்டத்தை டிக்ளேர் செய்வதாக அறிவித்தது.

இதையடுத்து இங்கிலாந்துக்கு வெற்றி இலக்காக 383 ரன்கள் நிர்ணயிக்கப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸை ஆடத் தொடங்கிய இங்கிலாந்து தொடக்கத்திலேயே சரிவைச் சந்தித்தது. பேட் கம்மின்ஸ் அதிரடி பந்துவீச்சில் ரோரிபர்ன்ஸ், ஜோ ரூட் ஆட்டமிழந்தனர்.

ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 18 ஓட்டங்களை எடுத்திருந்தது இங்கிலாந்து. ஜேஸன்ரோய், ஜோ டென்லி களத்தில் இருந்தனர்.

ஆஸி. தரப்பில் பேட் கம்மின்ஸ் 2 - 8 விக்கெட்டுகளை சாய்த்தார்.



# இந்திய ரெட் அணி சாம்பியன்

துலிப் கிண்ண இறுதிச் சுற்றில் இந்திய கிரீன் அணியை ஓர் இன்னிங்ஸ் மற்றும் 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது இந்திய ரெட் அணி.

இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. இந்திய கிரீன் அணி முதல் இன்னிங்ஸில் 231 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. மயங்க் மார்க்கண்டே 76 ஓட்டங்களையும், அங்கித் ராஜ்புத் 30 ஓட்டங்களையும் சேர்த்தனர். ரெட் அணி தரப்பில் உனத்கட் 4 -83 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

பின்னர் முதல் இன்னிங்ஸை ஆடிய இந்திய ரெட் அணி 388 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. ஏஆர். ஈஸ்வரன் அற்புதமாக ஆடி 153 ஓட்டங்களை விளாசினார். பிகே.பஞ்சால் 33, ஆர்.கல்ஸி 30, இஷான் கிஷான் 39, சர்வேட் 38 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

கிரீன் அணி தரப்பில் அங்கித் ராஜ்புத் 3 - 101, ஜடேஜா 3 - 93 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் தனது இரண்டாம் இன்னிங்ஸ ஆடிய கிரீன் அணி வெறும் 119 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக எஸ்டி. லேட் 42, அக்ஷத் ரெட்டி 33 ஓட்டங்களைச் சேர்த்தனர். மற்ற வீரர்கள் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர்.

ரெட் அணி தரப்பில் வாக்ரே அபாரமாக பந்துவீசி 5 - 13, அவேஷ் கான் 3 - 38 விக்கெட்டுகளையும் சாய்த்தனர். இறுதியில் ஓர் இன்னிங்ஸ் மற்றும் 38 ரன்கள் வித்தியாசத்தில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது ரெட் அணி.



# செரீனாவை வீழ்த்தி அறிமுக போட்டியிலேயே
# சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார் பியான்கா!

அமெரிக்க ஓபன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியில் முன்னணி வீராங்கனை செரீனாவை வீழ்த்தி அறிமுக போட்டியிலேயே பட்டம் வென்று அசத்தினார் இளம் வீராங்கனை பியான்கா.

கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும் கனடாவின் பியான்கா ஆண்ட்ரீஸ்குவும் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பியான்கா 6 - 3, 7 - 5 என்ற நேர் செட்கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

அறிமுக போட்டியிலேயே கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று அசத்திய 19 வயது நிரம்பிய கனடா வீராங்கனை பியான்காவுக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

கனடா இளம் வீராங்கனைகளில் 2009 இற்கு பிறகு இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் வீராங்கனை என்ற பெருமையையும் பியான்கா பெற்றுள்ளார்.



## பங்களாதேஷ் உடனான டெஸ்ட்:
# ஆப்கன் 374 ஓட்டங்கள் முன்னிலை!

பங்களாதேஷ் அணியுடன் நடைபெறும் ஒரே யொரு டெஸ்ட் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆப்கானிஸ்தான் அணி 374 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சிட்டகாங் நகரில் நடைபெறுகிறது. ஆப்கன் அணி முதல் இன்னிங்ஸில் 342 ஓட்டங்களுக்கும், பங்களாதேஷ் அணி 205 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தன. அதைத் தொடர்ந்து ஆப்கன் அணி தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆடியது.

மூன்றாம் நாளான சனிக்கிழமை ஆட்ட நேர முடிவில் 83.4 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 237 ஓட்டங்களை எடுத்திருந்தது ஆப்கன்.

இப்ராஹிம் ஸட்ரன் 4 சிக்ஸர், 6 பவுண்டரியுடன் 87 ரன்களையும், அஷ்கர் ஆப்கன் 2 சிக்ஸர், 4 பவுண்டரியுடன் 50 ஓட்டங்களையும் விளாசினர்.

அணித் தலைவர் ரஷீத் கான் 6 பவுண்டரியுடன் 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அப்ஸர் ஸஸாய் 34 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

பங்களாதேஷ் தரப்பில் ஷகிப் அல் ஹஸன் 3 - 53, தைஜுல் இஸ்லாம் 2 - 68, நயீம் ஹஸன் 2 - 61 விக்கெட்டுகளைச் சாய்த்தனர்.

இதன் மூலம் பங்களாதேஷைக் காட்டிலும் 374 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது ஆப்கானிஸ்தான்.



# கோட்டாவின் மொட்டுச் சின்னத்துக்கு 'செக்' வைக்கின்றது சுதந்திரக் கட்சி!

கொழும்பு,செப்.09

மொட்டு சின்னத்தில் போட்டியிட்டால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முடியாது என்றும், கை அல்லது வேறு சின்னத்தில் போட்டியிட்டாலேயே அவருக்கு ஆதரவு அளிக்க முடியும் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிபந்தனை விதித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எட்டு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ள போதும், இதுவரை தீர்க்கமான இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

வெள்ளியன்று இரண்டு தரப்புகளும் நீண்ட பேச்சுக்களை நடத்திய பின்னர், கருத்து வெளியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ இந்தப் பேச்சுக்கள் சாதகமாக இருந்தன என்றும், சுதந்திரக் கட்சியின் ஆதரவு தமக்கு கிடைக்கும் என்றும் கூறியிருந்தார்.




எனினும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளதாம்.

கோட்டாபய ராஜபக்ஷ, சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் கைச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் அல்லது வேறொரு பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று சுதந்திரக் கட்சி கோரியிருப்பதாக அந்தக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது, ஜனாதிபதித் தேர்தலில் வேறு பொதுவான சின்னத்தில் போட்டியிடுமாறு கேட்டோம்.

இதனை ஏற்றுக்கொண்டால், கோட்டாபய ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்க நாங்கள் விருப்பம் தெரிவித்தோம்.

பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில், போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடன்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மொட்டு சின்னத்தைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என்பதில் கோட்டா மிக உறுதி

கொழும்பு,செப்.09

மொட்டு சின்னத்தைக் கைவிட்டு, வேறொரு பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிபந்தனையை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தனது மொட்டுச் சின்னத்தை மாற்றி, வேறொரு பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர இப்போது வலியுறுத்துகிறார்.

இது கடினமான நிபந்தனை என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த சின்னம், இப்போது, அவர்களின் அடையாளமாக மாறியிருக்கிறது. அதனைக் கட்சி அடையாளம் கண்டுள்ளது.

மொட்டுச் சின்னத்துக்கு மாற்றுச் சின்னத்தில் போட்டியிடுவது பற்றி கோரிக்கை விடுக்கப்பட்ட போது, முதலில் அதனை ஜி.எல்.பீரிஸூம், பஸில் ராஜபக்ஷவும் நிராகரித்திருந்தனர்.

கடந்தவாரம் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்பின் போது, இந்த விவகாரத்தை தயாசிறி ஜயசேகர மீண்டும் கையில் எடுத்தார்.

எனினும், அதற்கு கோட்டாபய ராஜபக்ஷ, சின்னத்தை மாற்றுகின்ற பேச்சுக்கே இடமில்லை என்று நிராகரித்து விட்டார்.

பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளாமலேயே அந்தக் கட்சி என்னை அதிபர் வேட்பாளராக நிறுத்தியுள்ளது. மொட்டுச் சின்னம் நாடெங்கும் எமது சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனை மாற்ற முடியாது என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் என, அந்தக் கொழும்பு ஆங்கில வாரஇதழ் மேலும் தெரிவித்துள்ளது.

## மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவின் 'உத்தரதேவி' சிங்கள நூல் வெளியீடு

கொழும்பு,செப்.09

இலங்கை இராணுவத்தின் முன்னாள் அதிகாரி மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன எழுதியுள்ள 'உத்தரதேவி' என்ற நூல், வெள்ளியன்று மாலை கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

பிவுப் கல்லூரி அரங்கில் நடந்த இந்த நிகழ்வில், 'உத்தரதேவி' சிங்கள நூலின் முதல் பிரதியை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார்.



இந்த நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசியல் பிரமுகர்கள், முன்னாள் படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, ஓய்வு பெற்ற பின்னர் 'நந்திக் கடலுக்கான பாதை' நூலை எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கணினி உலகில் நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
nothern PC PARK
Best way BUY
Best COMPUTER
உலகத் தரம்
உங்கள் கைகளில்
10-14, STANLY ROAD
JAFFNA
0212222050 / 0777570124
info@pcpark.co
www.pcpark.co

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

# வலி. கிழக்கிலிருந்து சந்நிதி செல்லும் பாலம் திறப்பு



வலி கிழக்கில் இருந்து சந்நிதி ஆலய வளாகத்தை அடையும் தொண்டமானாறு உவர்நீர்த் தடுப்பணை பாலத்தினூடான போக்குவரத்துகதவுகள் நீர்ப்பாசனத்திணைக் களத்தினால் திறந்து விடப்பட்டுள்ளதுடன் உற்சவத்தினை முன்னிட்டு இப்பகுதியூடாக ஆலயத்தினை அடையும் பக்தர்களுக்கான ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: சந்நிதி முருகன் ஆலயத்தின் உற்சவத்தின் போது வருடா வருடம் தொண்டமனாறு உவர் நீர்த்தடுப்பணை பாதை ஊடாக போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படுவது வழமையாகவுள்ளது. இவ்வருட உற்சவத்தில் ஆறு நாள்கள் முழுமையாக இப்பகுதி ஊடான போக்குவரத்திற்கு நீர்ப்பாசனத்திணைக்களம் உடன்பட்டிருந்தது. இந்நிலையிலேயே பாலத்தின் ஊடாக பக்தர்களின் போக்குவரத்திற்கு திறந்துவிடும் நிகழ்வு சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றது.

நீர்ப்பாசனப் பொறியியலாளர் சர்வநந்தன் சர்வராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராஜா உள்ளிட்ட ஆலய முக்கியஸ்தர்



கள், பிரமுகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின்செயலாளர்கள், கிராமசேவையாளர்கள், நலன்பேண் சேவைகளைச்சேர்ந்தோர் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் பக்தர்களின் போக்குவரத்திற்கான பாதைகளும் திறந்து விடப்பட்டன.

இப்பாலம் யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் குறிப்பாக சந்நிதி உற்சவ காலத்தில் பிரதேச சபைகளின் பங்களிப்போடு மண் அணைகள் அமைக்கப்பட்டு பக்தர்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டது. எனினும்; யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீரைப்பாதுகாக்கும் நோக்குடன் உலக வங்கியின் 40 கோடி ரூபா நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட மிக நீண்ட அழகான புறத்தோற்றமுடைய இப்பாலத்தின் பணிகள் கடந்த வருடம் பூர்த்தி செய்யப்பட்டன. இதனைத்தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் இருந்து சந்நிதி ஆலயத்தை அடையும் இலகுவழி மார்க்கமாக இப் பாதை உள்ளது.கடந்தவருடம்உற்சவகாலத்தில் மூன்று நாள்களே இப்பாதை திறந்து விடப்பட்டபோதும் இம் முறை ஆறு நாள்களுக்கு திறந்துவிடப்படவுள்ளது.

இதேவேளை, சந்நிதி உற்சவ ஏற்பாட்டுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க தனியார் வாகனத் தரிப்பிடவசதிகள் ஏற்பாடு செய்துள்ளதுடன் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் அரச தனியார் வாகனங்கள் தரித்து நின்று பக்தர்களை ஏற்றிச் செல்வதற்கான உரிய ஒழுங்கு வசதிகளும் செய்யப்பட்டுள்ளதுடன் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் வலி கிழக்கு பிரதேச சபை எல்லையூடாக ஆலயத்தினை அடையும் வாகனங்களுக்கு நோக்கில் ஒருவழி போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்தும் பொலிஸாருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# சம்மாந்துறைப் பொலிஸ் பகுதியில் தனியன் காட்டு யானை அட்டகாசம்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒடங்கா - 2 பகுதியில் தனியன் காட்டு யானை ஒன்று பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் அதிகாலை திடீரெனத் தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இவ்வாறு உள்நுழைந்த பெரிய தனியன் யானை அங்குள்ள வீடுகளின் சுவர்களை உடைத்துச் சேதமாக்கியுள்ளதுடன் நெற்களஞ்சியத்திற்கும் கடும் சேதங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

இதற்கிடையில், கடந்த 3 தினங்களுக்கு முன்னர் கல்லிரைச்சல் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் படுகாயமடைந்து கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஏ.அமீர் என்ற நபரும் நேற்று உயிரிழந்தள்ளார்.

யானையின் தாக்குதலுக்கு உள்ளான வீட்டு மதில்கள், சேதமடைந்த நெற்களஞ்சியப் பகுதிகளை பொலிஸாரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இந்த இடங்களைச் சுற்றி ஐம்பதுக்கும் அதிகமான யானை கூட்டங்கள் இருக்கின்றன எனவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

குறிப்பாக இந்த யானைகள் அடிக்கடி எங்கள் பிரதேங்களுக்கு திடீர் திடீரென வருகின்றன. இதனால் எங்களுக்கு அச்ச நிலை காணப்படுகிறது. சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்படுகின்றன. இது விடயத்தில் உரிய அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு எங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். – என்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் நிந்தவூர் பகுதிகளிலும் யானைகள் தாக்குதல் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2019 இல் வெளியிடப்பெற்றது.

# நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகவே தமக்குத் தளபதி நியமனம் என்கின்றார் சவீந்திர சில்வா!

கொழும்பு,செப்.09

நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்பதாலேயே, சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில், ஜனாதிபதி தன்னை இராணுவத் தளபதியாக நியமித்தார் என லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் தீவிரவாதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முப்படைகளின் பிரதானி என்ற வகையில் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தினார். அத்தோடு, சர்வதேச மட்டத்திலிருந்து பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும், அதையும் மீறி என்னை அவர் இலங்கையின் புதிய இராணுவத் தளபதியாக நியமித்தார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் இராணுவத்தின் தலைமை தொடர்பாக சிந்தித்தே அவர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.



இலங்கை இராணுவம் கடந்த காலங்களில் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் ஆற்றிய சேவைகளை நாம் புதிதாகக் கூறவேண்டிய அவசியம் கிடையாது.

அந்தவகையில், எதிர்வரும் காலங்களிலும் இதேபோன்று சேவைகளை நாட்டுக்கு வழங்க இராணுவம் என்ற ரீதியில் நாம் தயாராகவே இருக்கிறோம்.

எவ்வாறான அழுத்தங்கள் வந்தாலும் எனது கடமையிலிருந்து ஒரு போதும் பின்வாங்கப்போவதில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பை இன்னும் அதிகமாக பலப்படுத்துவோம் என்றும் இலங்கை இராணுவத் தளபதியாக நான் இவ்வேளையில் கூறிக்கொள்கிறேன் – என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ)

## கிளிநொச்சி வாவியில் மூழ்கிய தாயும், இரு பிள்ளைகளும் மீட்பு



கிளிநொச்சி –அரசஊர்க்குளம் வாவியில் நேற்றுமுன்தினம் மதியம் நீராடிய போது, நீரில் மூழ்கிய தாய் மற்றும் இரு பிள்ளைகளை இராணுவத்தினர் மீட்டனர். அரசபுரக்குளம் வாவியில் நீராடச் சென்ற தாயும் பிள்ளைகளும் நீரில் மூழ்கிய போது, கூச்சலிட்டனர்.

அப்போது, இரு படையினர் வாவிக்குள் பாய்ந்து இந்த மூவரையும் காப்பாற்றிக் கரைக்கு கொண்டு வந்தனர்.

முதலுதவிச் சிகிச்சையின் பின்னர் மூவரும் இராணுவத்தினரது உதவியுடன் பூநகரி வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர். பின்பு வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய மேலதிக சிகிச்சைக்காக இந்த மூவரும் யாழ். போதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என இராணுவ ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## மரத்துடன் மோதிய டிப்பர்



வவுனியா- மடுகந்த பிரதேசத்தில் நேற்று அதிகாலை டிப்பர் வாகனம் ஒன்றுவீதியைவிட்டு விலகி, மரம் ஒன்றில்மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்தார். யான்ஓய பிரதேசத்தில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தின் சாரதிக்கு நித்திரை கலக்கம் ஏற்பட்டதால் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த பனை மரத்தில் மோதி விபத்துக்கு உள்ளானதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் காயமடைந்த சாரதியை டிப்பர் வாகனத்தில் இருந்து மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.விபத்தில் டிப்பர் வாகனம் கடுமையாக சேதமடைந்துள்ளது.

NEW SCIENCE WORLD
VICTORY MUST

NEW SCIENCE WORLD
021 221 6690, 077 336 4055

அலகு ரீதியான மீட்டல் திங்கள் - வெள்ளி

உயிரியல் - திரு. N.T. கஜேந்திரன்
இணை கணிதம் - திரு. S. கிருஷ்ணா
- 7.30 am - 9.30 pm

இரசாயனவியல்
டயஸ் - 9.30 am - 11.30 pm
திரு.K.T. சிவகுமார் - 5.30 pm - 7.00 pm

பௌதிகவியல்
திரு.R.குகன்
திரு.R. குமரன்
- 11.30 am 1.30 pm

ஆரம்பம் :- 05.09.2019 நேரம்: 7.30 am

Past Papers and Model Papers சனி, ஞாயிறு

பௌதிகவியல் - திரு.R.குகன் - 7.30 am - 10.00 am
ஆரம்பம் :- 07.09.2019 நேரம்: 7.30 am